[1981 ஏப்ரல் 25]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்திலே இருக்கும் அந்த அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் 1947 ஆம் ஆண்டிலேயிருந்து பொதுமக்கள் மத்தியிலேயும், அரசியல் வல்லுநர்களிடத்திலேயும் அடிபட்டு அடிபட்டு அது அடிபட்டே போய்விட்டது. இந்த நிலையில் மீண்டும் அதனைச் சீர்படுத்தும் வகையில் செய்தால் அங்கேயிருக்கின்ற மக்கள் ஏழு மைல், பத்து மைல் அளவிற்குச் சுற்றிவராமல் இரண்டு பர்லாங் தூரத்திற்குள்ளேயே அடுத்த நகரங்களைப் பார்க்கின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, தென்பெண்ணை ஆற்றில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நிதி நிலைமை சரியானவுடன் கண்டிப்பாக அரசு முன்வரும்.

அரூர் நகரிலுள்ள அரசு மருத்துவமனை

*வினா எண். 882—திரு. சி. சபாபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் அரூர் நகரில் தற்பொழுது உள்ள மருத்துவ மனையை மாற்றி புதிய மருத்துவமனை கட்டுவதற்கு அரசிடம் திட்ட முள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இந்த மருத்துவமனைக்கு ரூ. 10.63 லட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டமாகக் கருதப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டம் அரூர் நகரில் இருக்கும் அந்த மருத்துவமனையை மாற்றியமைத்துப் புதிய மருத்துவமனை கட்டுவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திட்டம் சொல்லப்பட்டு, ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும்கூட பரிந்துரை செய்யப்பட்டு, கட்டுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனாலும்கூட இன்றையதினம் அரசு 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டமாக கருதப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருப்பது குறித்து என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதை எவ்வளவு சீக்கிரம் விரைவுபடுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் விரைவுபடுத்துவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதை உடனடியாகக் கட்டுவதற்காக நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். A new hospital building 24 படுக்கைகள் கொண்ட Out-patient blocks, operation theatre, X-ray block, மற்றும் Kitchen block இவைகளெல்லாம் சேர்ந்து 10.63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். அதுமட்டுமல்லாமல் இதிலே Assistant Surgeons 2, Nurses 3, Auxiliary mide-wife இவைகளிலெல்லாம் யார் யாரை நியமிக்க வேண்டுமென்பதையும் அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்திருக்கிறது. ஆகவே, இந்த மருத்துவமனை, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் எழுப்பிய வினாவிற்கிணங்க நிச்சயமாக விரைவில் கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருந்துறை காசநோய் மருத்துவமனை

*883 வினா.—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை காசநோய் மருத்துவமனையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டுக்கு ஒரு படுக்கைக்கு மட்டும் பணம் கட்டப்பட்டு வருவதை மாற்றி நிதி வசதியுள்ள ஒன்றியங்களில் அதிக அளவு 10 படுக்கைகள் வரை பணம் கட்ட அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பெருந்துறை இராமலிங்கம் காசநோய் மருத்துவமனை ஒரு தனியார் மருத்துவ மனையாகும். ஆதலால் அரசு எந்த முடிவும் எடுக்க இயலாது.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திற்கும், கோவை மாவட்டத்திற்கும் காசநோய் மருத்துவ மனையாக இந்தப் பெருந்துறை காசநோய் மருத்துவமனை தொன்றுதொட்டு விளங்கி வருகிறது. அது தனியார் கையிலே இருக்கின்ற காரணத்தினால் அங்கே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்குக்கூடச் சரியாகச் சம்பளம் கொடுக்கப்படாமல் இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் சம்பளம் கிடைக்காத நிலை இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, அதை அரசே எடுத்து அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்கி அந்த மாவட்டங்